## புதிய வழித்தடம் இணைந்துள்ளதால் மெட்ரோ ரயிலில்

# பயணிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

■ சென்னை

டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை வரையிலான புதிய வழித்தடம் இணைக்கப்பட்டுள்ளதால், மெட்ரோ ரயில்களில் பயணிப் போரின் எண்ணிக்கை 50 ஆயிரத் தில் இருந்து 86 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

சென்னையில் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டம் நிறை வடைந்துள்ள நிலையில், மொத்தமுள்ள 2 வழித்தடங் களில் 45 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில்சேவை தொடங் கப்பட்டுள்ளது. சென்ட்ரல், எழும் பூர், கோயம்பேடு, அண்ணா நகர், விமான நிலையம் போன்ற முக்கிய பகுதிகளை இணைக் கும்வகையில்மெட்ரோரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையே, மெட்ரோ ரயில் பயணம் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள உயர்தர வசதிகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகை யில் கட்டணமில்லாத பயணத் துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கடந்த 10-ம் தேதி மாலை முதல் 14-ம் தேதி வரை மெட்ரோ ரயிலில் மொத்தம் 7 லட்சத்து 34 ஆயிரத்து 379 பேர் இலவச மாக பயணம் செய்துள்ளனர். இதற்கிடையே, நேற்று முன்தினம் காலை முதல் கட்டண முறை அமலானது. அதன்படி, முதல்நாளில் மொத் தம் 86 ஆயிரத்து 312 பேர் பயணம் செய்துள்ளனர்.

மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறும்போது, “புதிய வழித்தடங்களில் கட்டண முறை அமலாகியுள்ளது. காலை மற்றும் மாலை நேரங்களில் மெட்ரோ ரயில் நிலையங்களில் கூட்டம் இருந்தது. மக்களிடம் நல்லவரவேற்பு கிடைத்துள்ளது. பயணிகள் எண்ணிக்கை 50 ஆயிரத்தில் இருந்து 86 ஆயிரமாக அதிகரித்துள்ளது. சலுகை அட்டைகள் குறித்து பயணிகள் ஆர்வமாக கேட்டுச் செல்கிறார்கள்.

மேலும், பல்வேறு இடங் களில் ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்ஸி வசதியை விரிவாக் கம் செய்யவுள்ளோம். இதன் மூலம் பயணிகளின் எண் ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம்” என்ற னர்.